# ஊர்காவற்றுறை பிரதேசசபை
# කයිට්ස් ප්‍රාදේශීය සභාව
# KAYTS PRADESHIYA SABHA

சுருவில் வீதி, ஊர்காவற்றுறை. | සුරුවිල් පාර, කයිට්ස් | Suruvil Road, Kayts.


எனது இல / මගේ අංකය / MY No: NP/14/41(9)/BA/2025

உமது இல / ඔබේ අංකය / Your No:

திகதி / දිනය / Date: 25.09.2025

---

தலைவர்,
அனலைதீவு அரிஹரபுத்திர ஐயனார் ஆலய பரிபாலன சபை
அனலைதீவு.

## கட்டட விண்ணப்ப அனுமதி

1987ஆம் அண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரிவு 47 இன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறும். 1978ம் ஆண்டின் 41ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைவாகவும் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட 2025.05.22 ஆம் திகதிய **KPS/ASO/BA/02/2025**ம் இலக்க விண்ணப்பத்திற்கான கட்டடம் அமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படுவதுடன் அதற்கான வரைபடம் அங்கீகரித்து இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

### அனுமதிப் பத்திரத்திற்கான நிபந்தனைகள்

1. அனுமதிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒருவருட காலத்தினுள் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். தவறின் மேலும் ஒருவருடத்திற்கான காலநீடிப்பு வழங்குவதற்கு காலநீடிப்புக் கட்டணம் செலுத்தப்பட்டு காலநீடிப்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.
2. அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் கண்டிப்பாக அங்கீகரிக்கப்பட்ட படத்திற்கும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளிற்கும் அமையவே மேற்கொள்ளப்படல் வேண்டும்.
3. கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதும் உடன் அமைவுச் சான்றிதழிற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.
4. கட்டடம் அமைக்கப்பட்ட பின்னர் எம்மால் வழங்கப்படும் அமைவுச் சான்றிதழைப் பெற்ற பின்பே குறித்த கட்டடத்தைப் பயன்படுத்தவேண்டும்.
5. எந்நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்ட கட்டடம் அமைக்கப்பட்டதோ அந்நோக்கத்திற்கு மாத்திரமே பயன்படுத்தப்படல் வேண்டும்.
6. இயற்கை நீரோட்டம் தடைசெய்யப்படும் வகையில் கட்டடம் அமைதல் கூடாது.
7. கட்டட சுற்றுப்புறச்சூழல் எந்நேரமும் சுத்தமாகப் பேணப்படல் வேண்டும்.

தங்களால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் திருத்தமானவை என்றும் செம்மையானவை என்றும் எடுத்துக்கொண்டே இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. கட்டட விண்ணப்பத்திலோ அன்றி வேறுவிதமாகவோ தங்களால் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை என்று எந்த நேரத்திலாவது காணப்படுவதாயின் இந்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் உரிமை பிரதேசசபைக்கு உண்டு.

பிரதேசசபைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் எதனையும் மீறுகின்ற எவர் ஒருவரும் நீதிமன்றம் மூலம் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றம் புரிவாராவார்.

A. [signature]
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

A. Annarasa
Chairman
Pradeshiya Sabha
Kayts

---


தொலைபேசி இல / දුරකථන අංකය / Telephone No: 021 221 1626
மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / E-Mail: kaytsps@gmail.com
தொலைநகல் இல / ෆැක්ස් අංකය / Fax No: 021 221 5003



**Analaitivu Sri Harihara Puthra Iyanar Temple**
© 2026 · All rights reserved · analaitivuiyanar.org